உ

# ஸ்ரீ ஹிரண்ய கேசி க்ருஹ்யஸூத்ரம்
# ஸ்ரீ ஹிரண்ய கேசி க்ருஹ்யகாரிகை
## ஸ்ரீ ஸத்யாஷாட ஸூத்ர
## ச்ராத்த ப்ரயோகம்



ஸ்ரீ ஸத்யாஷாட மஹரிஷி

*வெளியிட்டோர் :*

**வேத ரக்ஷண நிதி டிரஸ்ட் (ரெஜிஸ்டர்ட்)**

No. 2, "ஸ்ரேயஸ்", 6-வது மெயின் ரோடு,

நங்கநல்லூர், சென்னை-600 061.

# PREFACE

The Veda Rakshana Nidhi Trust feels beholden to Sri A. Sundaram, (Retd.) Income-Tax Officer, Madras, for giving an opportunity to be associated with the endeavour in the great service done to assist the 'Grahasthas' who follow the footsteps of the 'Rishi Sathyashada' who gave them the 'Sathyashada Sutra' of Krishna Yajur Veda, one of the six main Sutras pertaining to Krishna Yajur Veda. The followers of this Sutra in their domestic rituals, are mostly in some villages in Tamil Nadu and also in Maharashtra State.

This seems to be the first attempt to print both the the Sutra and Prayoga in one volume to enable the Satyashadins to have rituals and their base together.

**S. ANNADURAI IYENGAR**
Chairman and Incharge Executive Trustee
for VEDA RAKSHANA NIDHI TRUST (Regd.)

MADRAS,
20—10—1988.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

# முகவுரை

1. புண்ய பூமியான நம் பாரத நாட்டிலுள்ள தைத்திரீய சாகையைச் சேர்ந்த எல்லா யஜுர்வேதிகளும் அவரவர்கள் செய்ய வேண்டிய க்ருஹ்ய கர்மாக்களை ஆபஸ்தம்பம், போதாயனம், வைகாநஸம், ஸத்யாஷாடம், பாரத்வாஜம், ஆக்னிவேஶ்யம் என்ற 6 ஸூத்ரங்களில் செய்து வருகிறார்கள். எல்லா ப்ராம்மணர்களும் அவரவர்கள் குல தர்மத்தை அனுஸரித்து ஏதாவது ஒரு க்ருஹ்ய ஸூத்ரப்படி க்ருஹ்ய கர்மாக்களை செய்துகொண்டு வருகிறார்கள். பெரும்பான்மையோர் ஆபஸ்தம்ப ஸூத்திரத்தை அனுஷ்டிப்பவர்களாகவும், அடுத்தபடியாக போதாயன ஸூத்திரத்தை அனுஷ்டிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

2. சிறு வைரக் கற்கள் ஆனாலும் பட்டை தீட்டப்படாவிடில் விலை போகாதல்லவா? அது போல் ப்ராம்மணர்களாக பிறந்தவர்கள் ஸம்ஸ்காரம் இல்லையானால் சோபையை இழந்து விடுவார்கள். எனவே ப்ரஹ்மவர்சஸ் என்ற ப்ராம்மணனுக்கு ஏற்பட்ட தபஸ்ஸையும், கர்மானுஷ்டானங்களையும் அவசியம் செய்வதற்காக பகவானால் கல்பிக்கப்பட்டதை மஹரிஷிகள் பேருபகாரம் செய்து ஸூத்ரமாக வெளியிட்டார்கள். அவைகளுக்கு காரிகையும் செய்து அருளினார்கள்.

3. ஸ்ரீ ஸத்யாஷாட மஹரிஷியானவர் மஹாமஹிமை பொருந்திய ஸத்யாஷாட ஸூத்திரம் என்ற க்ரந்தத்தை வேதோக்த யக்ஞாதிகளுக்கும், ப்ராம்மண கர்மானுஷ்டானங்களில் (கர்ப்பாதானம் முதல் அந்திய இஷ்டி பர்யந்தம்) அவசியம் செய்ய வேண்டிய கர்மாக்களுக்கும் உபயோகமாகச் செய்து அருளினார். வேதோக்தமான யாகங்கள் முதலான கர்மாக்களுக்கு ச்ரௌதம் என்றும், உபநயனம் போன்ற கர்மாக்களுக்கு க்ருஹ்யம் என்றும் பெயர். இதை ச்ரௌத ஸ்மார்த்தப் ப்ரயோகங்கள் என்று கூறுவர். இவைகளை பரம கருணையுடன் மஹரிஷி ஸத்யாஷாடர் ப்ராம்மண ஸமுதாயத்திற்கு இகபர க்ஷேமத்தை அடையவேண்டி செய்து அருளினார்.

4. இந்த ஸூத்ரமானது ஹிரண்யகேசியர் என்று சொல்லப்படும் சிறுபான்மையோரால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதை அனுசரிப்பவர்கள் தென் நாட்டில் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலும், வட நாட்டில் மஹாராஷ்டரத்திலும் இருக்கிறார்கள்.

5. நாளுக்கு நாள் இந்த ஸூத்திரப்படி கர்மாக்களை பண்ணி வைக்கும் நன்கு அறிந்த உபாத்யாயர்கள் குறைந்துகொண்டு வருகிருர்கள். இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலை மேலும் மோசமாகி, உபாத்யாயர்கள் கிடைப்பதே அரிதாகிவிடும் போல் இருக்கிறது. ஸத்யாஷாட ஸூத்ரப் பிரயோக புஸ்தகமும் எங்கும் கிடைப்பதில்லை.

6. இதனுல் ஸத்யாஷாட ஸூத்ரக்காரர்கள் வேறு ஸூத்ரங்களில் கர்மாக்கள் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதினுலும், இனி இந்த ஸூத்ரப் ப்ரயோகமே அனுஷ்டானமில்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தினுலும் என் தமையனுரின் தூண்டுதலின்பேரில் அடியேன் இவ்விஷயத்தை காஞ்சியம்பதியில் ஸாக்ஷாத் பரமேச்வரன் போன்று காமகோடி பீடத்தை அலங்கரித்துவரும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸன்னதியில் [கர்நாடகாவில் மஹாகாவ் என்ற கிராமத்தில் 1982 அக்டோபர் மாதம் முகாமில்] விக்ஞாபனம் செய்தபோது ஸ்ரீ மஹாபெரியவாள் மிகக் கருணையுடன் பல யோசனைகள் கூறி, நடுக்காவேரியில் விசாரிக்கச் சொல்லியும், 'வேத ரக்ஷண நிதி டிரஸ்ட்' சேர்மன் ஸ்ரீ எஸ். அண்ணுதுரை அய்யங்காரை அணுகும்படியும் ஆசி கூறினுர்கள்.

7. ஸ்ரீ மஹா பெரியவாளின் ஆக்ஞைப்படி ஸதாரா சங்கர மடத்தில் இருந்த சில ஸத்யாஷாட ஸூத்ரப் புஸ்தகங்கள் வரவழைக்கப்பட்டு ஸ்ரீ அண்ணுதுரை அய்யங்காரால் பார்க்கப்பட்டது. ஆனுல் ஸத்யாஷாட ஸூத்ர க்ருஹ்யமும், ப்ரயோகமும் கிடைக்கவில்லை. மற்றும் புனு, பம்பாய் பல இடங்களில் விசாரித்தும் பலன் இல்லாமல் போயிற்று.

8. முற்காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதி இருந்ததை நடுக்காவேரி என்ற கிராமத்தில் சுமார் 100 வருஷங்களுக்கு முன் பிரகாசித்து வந்தவரும், ஸகல தர்ம சாஸ்த்ரங்களிலும் நிபுணராக இருந்தவரும், "வைத்யனுத தீக்ஷிதீயம்" போன்ற க்ரந்தங்களை வெளியிட்டவருமான ஸத்யஷாட ஸபா அக்ராஸனுதிபதி ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் என்ற புண்ய புருஷர் அரும்பாடுபட்டு ஸத்யாஷாட க்ருஹ்ய ஸூத்ரம், காரிகை என்று தொகுத்து இரண்டையும் க்ரந்தாக்ஷரத்தில் ஸ்ரீ ஜகத்குரு முத்ராக்ஷர சாலையில் அச்சிட்டு வெளியிட்டிருந்தார்கள்.

9. இந்த அரிய புஸ்தகத்தின் நகல் ஒன்று சென்னை பழைய மாம்பலத்தில் வசித்துவந்த இரண்டாங்கட்டளை வேத பாடசாலை ஓய்வு பெற்ற அத்யக்ஷகர் ஸ்ரீ பி. எஸ். அனந்தராம கனபாடிகளிடம் இருப்பதாகத் தெரிந்து எங்கள் பிரார்த்தனைக்கு இணங்கி அவர் கொடுத்ததின் பேரில் அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு க்ரந்த லிபியில் புஸ்தகம் அச்சுப்போட வாய்ப்பு கிடைத்தது. கிரந்தாக்ஷரத்தில் அச்சிடப்பட்ட ச்ராத்த ப்ரயோக புஸ்தகமும் மிகவும் பிரயாசைப்பட்டு கிடைத்தது.

10. "வேத ரக்ஷண நிதி டிரஸ்ட்" மூலம் க்ருஹ்ய ஸூத்ரமும், ச்ராத்த ப்ரயோகமும் அச்சுப்போடுவதென்று தீர்மானம் ஆயிற்று.

11. இதற்கிடையில் ஸத்யாஷாட ஸூத்ர அனுஷ்டான சபையினர் 18—12—1983 அன்று "ஸ்ரீ ஸத்யாஷாட ஸூத்ர ப்ரயோகம்" முதல் பாகம் என்ற புஸ்தகத்தை நாகரத்திலும், தமிழிலும் வெளியிட்டார்கள்.

12. அதனால் தற்போது வெளியிடப்படும் புஸ்தகத்தை க்ரந்தாக்ஷரத்தில் பதிப்பிக்க வேண்டும் என்று தீர்மானித்து பல தர்ம சாஸ்த்ரங்களுக்கும் தாய் போன்று பேருதவி செய்த கும்பகோணம் "சாரதா விலாஸ பிரஸ்" என்ற அச்சகத்தில் அச்சிடுவது ஒப்படைக்கப்பட்டது. அடியேன் ஸ்ரீ மஹா பெரியவாள் அவர்களிடம் பல தடவை சென்று புஸ்தகம் சீக்கிரமாக வெளிவர அனுக்ரஹிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்க, பரம தயாளுவும் கருணா மூர்த்தியுமான அவர்கள் பரிவுடன் அனுக்ரஹித்தார்கள். அதனால்தான் இந்த புஸ்தகத்தை க்ரந்தத்தில் வெளியிடுவது சாத்தியமாயிற்று. இந்த பேருபகாரத்திற்கு அடியேனும், இந்த ஸூத்ரக்காரர்களும் ஜகத்குரு ஸ்ரீ மஹா பெரிவாளுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

13. இந்த புஸ்தகத்தில் ஸத்யாஷாட ஸூத்ர க்ருஹ்யமும். காரிகையும், ப்ரஹ்ம யக்ஞம் முதல் ச்ராத்த கர்மா வரை ப்ரயோகமும் அடங்கியிருக்கிறது. இந்த அரிய க்ரந்தத்தை ஸ்ரீ மஹா பெரியவாளின் சரண கமலங்களில் சமர்ப்பிக்கிறேன்.

14. இதை வெளியிடுவது சம்பந்தமாக கைங்கர்யம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது அடியேனுடைய பெரும் பாக்யம்.

15. வேத ரக்ஷண நிதி டிரஸ்ட் இந்த நூலை வெளியிட முன் வந்ததற்கு அடியேன் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

16. இப்புஸ்தகத்தை நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்திருக்கிற சாரதா விலாஸ் அச்சகத்தார்க்கும், ப்ரூஃப் பார்த்துத் திருத்திக்கொடுத்த கூடலூர் ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களுக்கும் அடியேனும், வேத ரக்ஷண நிதி டிரஸ்ட்டும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

17. பல வேலைகளுக்கிடையில் "வேத ரக்ஷண நிதி டிரஸ்ட்" சேர்மன் ஸ்ரீமான் அண்ணாதுரை அய்யங்கார் அவர்கள் எடுத்துக் கொண்ட சிரத்தைக்கும், முயற்சிக்கும் நன்றி கூற அடியேன் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

18. இந்த நூலானது தற்போது இருக்கும் ஸத்யாஷாட ஸூத்ரக்காரர்களுக்கும், அவர்களுடைய பிற்கால சந்ததியாருக்கும் மிகவும் பேருபகாரமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் எல்லாரும் இக்க்ரந்தத்தை வாங்கி பயனடைய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

19. காஞ்சியில் ப்ரத்யக்ஷ தெய்வமாக பிரகாசித்துக்கொண்டு சகல ஜனங்களுக்கும் சதாசர்வ காலமும் அனுக்ரஹம் செய்து கொண்டுவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹா பெரியவாள் அவர்களின் அருளாசியினால் இந்த முகவுரை எழுதும் பாக்யம் பெற்ற அடியேன் என்னுடைய அனந்தகோடி பிரதக்ஷண நமஸ்காரங்களையும் வந்தனங்களையும் க்ருதக்ஞையையும் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாளுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

K. K. நகர், சென்னை-78.<br>
விபவ-ஞு ஆடி-மீ 22௳<br>
6—8—1988

அ. ஸுந்தரம் அய்யர்

—❉—